பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 07 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு 12 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் ,ன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

4. அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவெடுக்கச் செய்யும் வகையில் மாணவர்கள் பங்களிக்க வேண்டும் என்று இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் தெரிவித்துள்ளார்.

5. பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 3 தங்கம் உட்பட 21 பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாலத்தீவில் தமது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றிரவு தூத்துக்குடி வந்தடைந்த பிரதமர், அங்கு 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்தியா - இங்கிலாந்து இடையே கையெழுத்தான வரலாற்றுச் சிறப்பு மிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கை அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று அவர் கூறினார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வளர்ச்சியடைந்த தமிழகத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறினார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், நாட்டின் பொருளாதாரத்திற்கு வலு சேர்ப்பதுடன், இந்தியாவை உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கச் செய்யும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

எந்தவொரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும் போக்குவரத்து, எரிசக்தி போன்ற முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத் பிரதமர், கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

சரக்குப் போக்குவரத்து, தூய்மை எரிசக்தி போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் தமிழகத்தை புதிய வாய்ப்புகளுக்கான மையமாக உருவெடுக்கச் செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு மற்றும் தூத்துக்குடியின் வளமான கலாச்சாரம், வரலாற்றுச் சிறப்பு மிக்க பாரம்பரியம் ஆகியவற்றுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக அவர் கூறினார்.

வளமான மற்றும் வலுவான நாட்டைக் கட்டமைப்பதற்கு மாநிலங்களின் பங்களிப்பு அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

வீரபாண்டிய கட்டபொம்மன், அழகுமுத்துக்கோன், வ.உ.சிதம்பரம் பிள்ளை, மாகாகவி சுப்பிரமணிய பாரதி போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவுகூர்ந்த பிரதமர், தேசியக் கவிஞர் பாரதியாரின் தூத்துக்குடிக்கும் - காசிக்கும் இடையேயான ஆழமான பிணைப்பை எடுத்துரைத்தார்.

காசி தமிழ்ச் சங்கமம் போன்ற கலாச்சார முயற்சிகள் நாட்டின் பாரம்பரியம், ஒற்றுமை ஆகியவற்றை பறைசாற்றுவதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்கிய தொகை முந்தைய அரசு வழங்கிய தொகைகளைக் காட்டிலும் 3 மடங்கு அதிகம் என்று அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் பிரதமரின் இல்லந்தோறும் இலவச சூரிய சக்தி திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருவதாக தெரிவித்த பிரதமர், இத்திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகக் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்திற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதை சுட்டிக்காட்டிய பிரதமர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடிந்ததாக பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக 450 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தின் புதிய முனையத்தையும், 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 2 சாலைத் திட்டங்கள் உள்ளிட்ட திட்டங்களை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

தூத்துக்குடியில் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு பிரதமர் திருச்சி சென்றடைந்தார்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இன்று நடைபெறும் ராஜேந்திர சோழன் முப்பெரும் விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

மாமன்னன் முதலாம் ராஜேந்திர சோழனின் தென்கிழக்காசிய கடல் பயணம், கங்கைகொண்ட சோழபுரம் கட்டுமானப்பணி தொடக்கம் ஆகியவற்றின் ஆயிரமாவது ஆண்டினை குறிக்கும் வகையில் ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தையும் பிரதமர் வெளியிடுகிறார்.

<<<>>>

பின்னர் இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு 12 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக கூறினார்.

<<<>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<>>>>

விவசாயம் முதல் விண்வெளித் தொழில்நுட்பம் வரை அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவெடுக்கச் செய்யும் வகையில் மாணவர்கள் பங்களிக்க வேண்டும் என்று இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் தெரிவித்துள்ளார்.

திருச்சி தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற 21வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு 2 ஆயிரத்து 45 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார்.

விமர்சனங்களை உரிய முறையில் எதிர்கொண்டு பொறுப்புணர்வுடன் கல்வியறிவை பயன்படுத்துவதன் மூலம் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று கூறினார்.

அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பொறியியல் மற்றும் உற்பத்தி துறையில் மேக்-இன்-இந்தியா திட்டம் சுயசார்பு இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட உறுதுணையாக அமையும் என்று திரு. நாராயணன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஒருசில இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் மேட்டூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு 75 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கக் கூடும் என்பதால் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா நாடுகள் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

---------

கம்போடியா - தாய்லாந்து நாடுகள் இடையே எல்லை பகுதிகளில் நடந்து வரும் மோதல்களை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப் கேட்டுக்கொண்டுள்ளார்.

---------

மலேசியப் பிரதமர் திரு அன்வர் இப்ராஹிம் பதவி விலகக்கோரி கோலாலம்பூரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

---------

சோமாலியா நாட்டிற்கு மனிதாபிமான அடிப்படையில் மருந்துகள் உள்பட பத்து டன் அத்தியாவசிய பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------

பீகாரில், ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாமில் வாக்காளர்கள் தங்களது படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

---------

சத்தீஸ்கர் மாநிலம் பிஜப்பூர் மாவட்டத்தில் நக்சலைட்டுகள் 4 பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

---------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு. காந்தி வழங்கினார்.

---------

தென்காசி மாவட்டத்தில் வருவாய்த்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் ஆய்வு செய்தார்.

---------

ராமநாதபுரம் மாவட்டத்தில் தனியார் வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்த ஆட்சியர் திரு. சிம்ரத்ஜித் காலோன் 492 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

---------

விழுப்புரம் மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தீர்வு காண்பதற்கான சட்ட விதிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நீதிபதி மணிமொழி தெரிவித்துள்ளார்.

---

## *விளையாட்டுச் செய்திகள்*

பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 5 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கம் உள்ளிட்ட 21 பதக்கங்களை வென்றது.

இப்போட்டியில் நித்யா, துளசிமதி முருகேசன் மற்றும் ஜக்தீஷ் - நவீன் இணையும் தங்கப் பதக்கம் வென்றது.

சுகந்த், மனீஷா, சஞ்சனா, உமேஷ் மற்றும் சூர்யா — உமேஷ் இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

கிருஷ்ணா, மனோஜ், நீரஜ் உள்ளிட்ட 13 பேர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

-------------

இங்கிலாந்திற்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான நேற்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸின் ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்பிற்கு 174 ரன் எடுத்துள்ளது.

மான்செஸ்டரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 358 ரன் எடுத்தது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 669 ரன்.

**<<<<The End>>>>**